**ஜூலை 21**

**மனன வசனம்**

**தேவவசனம் விருத்தியடைந்தது; சீஷருடைய தொகை எருசலேமில் மிகவும் பெருகிற்று; ஆசாரியர்களில் அநேகர் விசுவாசத்துக்குக் கீழ்ப்படிந்தார்கள். அப்போஸ்தலர் 6:7.**

**ஆராய்ச்சிக்கு**

*அப்போஸ்தலர் 6; அப்போஸ்தலர் 7:48; எபிரெயர் 5:11-14; மீகா 6:1-16; அப்போஸ்தலர் 7; அப் 8:4-25.*

ஜூலை 21 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

## பாடம் 4

# சபையின் முதல் தலைவர்கள்



பெந்தெகொஸ்தே நாளில் மனந்திருந்தியவர்களில் பலர் கிரேக்கமொழி பேசிய யூதர்கள்; அதாவது, எருசலேமில் குடியிருக்கும்படி கிரேக்க-ரோமப் பகுதிகளிலிருந்து வந்த யூதர்கள். அப் 2:5,9-11. யூதேயாவிலிருந்த யூதர்கள் **'எபிரெயர்'** என்று அழைக்கப்பட்டார்கள். அப் 6:1. இவர்களிடமிருந்து பலவிதங்களில் அந்த யூதர்கள் வேறுபட்டிருந்தார்கள். குறிப்பாக, கிரேக்க மொழி பேசிய அந்த யூதர்களுக்கு யூதேயாவில் பேசப்பட்டுவந்த அரமெய்க் மொழி தெரியாது.

கலாச்சார, மத ரீதியிலும்கூட யூதேயக்கிறிஸ்தவர்களிடமிருந்து பல வகையில் வேறுபட்டார்கள். அயல் நாடுகளில் பிறந்து வளர்ந்திருந்ததால், யூதேயாவின் பாரம்பரியங்களை கொஞ்சமும் அறியாதவர்களாக இருந்தார்கள்; அதாவது, யூதேய யூதர்கள் அளவுக்கு அறியாதவர்களாக இருந்தார்கள்.

இஸ்ரவேல் தேசத்தில்மட்டுமே கடைபிடிக்கப்பட்ட மோசேயின் பிரமாணங்களிலும், தேவாலயச் சடங்குகளிலும் அதிக ஈடுபாடு இல்லாதவர்களாகவும் இருந்திருக்கவேண்டும்.

மேலும், கிரேக்க-ரோமப் பகுதிகளில் வாழ்ந்தபோது, புறஜாதியார்களோடு அதிக நெருக்கமாக அவர்கள் வாழ்ந்தவர்கள். எனவே, ஒருவரையொருவர் அரவணைத்து வாழவேண்டும் என்று கிறிஸ்தவம் போதித்தபோது, எளிதில் அதைப் புரிந்துகொள்ள முடிந்தது. உலகம்முழுவதிலும் சத்தியத்தைப் பகிர்ந்துகொள்ள, கிரேக்க-மொழி பேசிய யூதர்களைத்தாம் தேவன் அதிகம் பயன்படுத்தினார்.

*2018, ஜூலை 28 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

ஞாயிறு, ஜூலை 22

## ஏழு பேரை நியமித்தல்

**கிரேக்க மொழி பேசின யூதர்களின் குற்றச்சாட்டு என்ன? அப் 6:1.**

'அன்றாடம் வழங்கப்பட்டு வந்த உதவிகள் கிரேக்க விதவைகளுக்கு புறக்கணிக்கப்பட்டதாகக் குற்றஞ்சாட்டினார்கள். ஏற்றத்தாழ்வு எதுவானாலும் அது நற்செய்திக்கு முரணானதே; ஆனாலும், அதில் சாத்தான் வெற்றிகரமாக சந்தேகத்தை எழுப்பியிருந்தான். விசுவாசிகள்மத்தியில் பிரிவை உண்டாக்கும் முயற்சியில் சத்துரு வெற்றிபெறாமல் இருப்பதற்கு, எவ்விதத்திலும் அதிருப்தி உண்டாகாதபடி துரிதமாக நடவடிக்கை எடுக்கவேண்டியது அவசியமாக இருந்தது.'' – *EGW, AA, p 88.*

விசுவாசிகள் தங்களில் ஏழுபேரைத் தெரிந்துகொள்ளும்படி அப்போஸ்தலர்கள் கூறினார்கள். அவர்கள்'பந்திவிசாரணை (டீகனோ)' செய்யவும், தாங்கள் 'தேவ வசனத்தைப் போதித்து (டீகனியா)' ஜெபத்தில் தரித்திருப்பதாகவும் கூறினார்கள். அப் 6:2,4. டீகனோவும், டீகனியாவும் ஒரே சொல்லினத்தைச் சேர்ந்தவைதாம். இரண்டுக்குமுள்ள முக்கிய வித்தியாசம் என்ன தெரியுமா? பந்திவிசாரணை போன்ற சேவையை டீகனோ சுட்டிக்காட்டியது. அப் 6:2. 'வார்த்தையைப்' போதித்தல் போன்ற சேவையை டீகனியா சுட்டிக்காட் டியது. அப் 6:4. இது அன்றாடம் நிகழ்ந்ததாக அப் 6:1 சுட்டிக்காட்டுகிறது. ஆதிகாலச் சபையின் இரண்டு முக்கிய அம்சங்களை இங்குப் பார்க்கிறோம். ❶ போதித்தல் ❷ அந்நியோந்தியம் (பந்திவிசாரணை). எல்லாரும் சேர்ந்து சாப்பிடுவது, திருவிருந்தில் கலந்துகொள்வது, ஜெபிப்பது போன்றவை மூலம் அந்நியோந்தியமாக இருந்தார்கள். அப் 2:42,46; 5:42.

இயேசுவைப் போதிக்கிற அதிகாரத்தைப் பெற்றிருந்த அப்போஸ்தலர்கள் விசுவாசிகளுக்குப் போதிப்பதிலும், ஜெபிப்பதிலும் நேரம் செலவிட்டார்கள்; அந்த ஏழு பேரும், வீட்டுச் சபைகளில் அந்நியோந்தியந்திற்கடுத்த விஷயங்களில் உதவியாக இருந்தார்கள். இன்று சபை உதவியாளர்கள் செய்கிற பணிகளை மட்டுமே அவர்கள் செய்யவில்லை. உண்மையில் அவர்கள்தாம் சபையின் முதல் தலைவர்களாக இருந்தார்கள்.

**ஏழு பேரும் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்டு, அந்தப் பணியில் அமர்த்தப்பட்டார்கள்? அப் 6:2–6.**

ஒழுக்க, ஆவிக்குரிய, வாழ்க்கை தரங்களை வைத்து அந்த ஏழுபேரையும் தேர்ந்தெடுத்தார்கள். அவர்கள் நன்மதிப்பு பெற்றவர்களாக, ஆவியாலும் ஞானத்தாலும் நிறைந்தவர்களாக இருந்தார்கள். சபை குடும்பத்தாரின் அங்கீகாரத்துடன் அந்த ஏழு பேரையும் தேர்ந்தெடுத்து, அவர்கள்மேல் கைவைத்து, ஜெபம்பண்ணி, அந்த ஊழியத்திற்கு நியமித்தார்கள். எல்லாரும் அதை ஆமோதித்ததையும், சபை உதவியாளர்களாக பணியாற்ற அதிகாரம் அருளப்பட்டதையும் அந்தச் சடங்கு சுட்டிக்காட்டியது.

சபைக்குள் பிரிவினை உண்டாக்குவது எளிதுதானே! தேவன் தந்துள்ள வல்லமையால் நமக்குள் நாம் சமாதானமாக வாழவும், ஊழியப்பணியில்மட்டுமே கவனம் செலுத்தவும் என்ன செய்யலாம்?

## ஸ்தேவானின் ஊழியம்

நியமிக்கப்பட்ட அந்த ஏழுபேரும் சபையில் உதவியாளர்களாக இருந்ததுடன், சத்தியத்தையும் வல்லமையாகப் பகிர்ந்தார்கள். அதனால் நற்செய்தி பரவிவந்தது, விசுவாசிகளும் அதிக எண்ணிக்கையில் சபையில் சேர்ந்தார்கள். அப் 6:7. இந்த வளர்ச்சியின்நிமித்தம் ஆதிகாலச் சபைக்கு எதிர்ப்பும் எழுந்தது. பிறகு, பக்திமிக்கவரான ஸ்தேவானைப்பற்றிச் சொல்லப்படுகிறது.

**ஸ்தேவான், அவரது விசுவாசம், குணம்பற்றி அப் 6:8–15 என்ன சொல்கிறது? மேலும், ஸ்தேவான் எதைக் குறித்துப் பிரசங்கித்த போது அவரது எதிரிகள் வெகுண்டார்கள்?**

---

கிரேக்க மொழி பேசின யூதனான ஸ்தேவான், எருசலேமிலிருந்த கிரேக்க மொழி பேசும் யூதர்களுக்கான ஜெபாலயங்களில் நற்செய்தியைப் பகிர்ந்தார். அத்தகைய ஜெபாலயங்கள் நகரத்தில் ஏராளம் இருந்தன; அவற்றில் இரண்டைத்தாம் அப் 6:9 சொல்கிறது. ஒன்று, சிரேனே, அலெக்சந்திரியா ஆகிய தென் பகுதியிலிருந்து வந்தவர்களின் ஜெபாலயம். மற்றொன்று, சிலிசியா, ஆசியா ஆகிய வடபகுதியிலிருந்து வந்தவர்களின் ஜெபாலயம்.

இயேசுவை முன்னிட்டே வாக்குவாதம் உண்டாயிருந்தது. யூதேய விசுவாசிகளைவிட நற்செய்தியையும் அதன் அர்த்தத்தையும் ஸ்தேவான் ஆழமாக அறிந்திருந்ததே அவர்மேலான குற்றஞ்சாட்டிற்கு காரணமாக இருந்திருக்கலாம். மோசேக்கும் தேவனுக்கும் எதிராக ஸ்தேவான் தூஷணம்பேசுவதாகக் குற்றஞ்சாட்டினார்கள். அதாவது, பிரமாணத்திற்கும் தேவாலயத்திற்கும் எதிராகப் பேசுவதாகச் சொன்னார்கள். அவர் பேசியது புரியாமல் இருந்திருக்கலாம்; அல்லது, அதை வேண்டுமென்றே திரித்துக் கூறியிருக்கலாம்; அவரைக் குற்றஞ்சாட்டும்படி பொய்ச்சாட்சிகளையும் ஏற்படுத்தியிருக்கலாம்; இயேசுவைப்பற்றி அவர் சொன்னதாக அவர்கள் தொடுத்த குற்றச்சாட்டு முற்றிலும் பொய்யெனச் சொல்லமுடியாது. மாற்கு 14:58; யோவான் 2:19. தேவாலயத்தை கடவுள்போலக் கருதி வணங்குவதாக சனகெரிம் சங்கத்தாரை ஸ்தேவான் வெளிப் படையாகச் சாடுகிறார். அப் 7:48. எனவே இயேசுவின் மரணத்தில் உள்ளடங்கி யிருந்த சத்தியத்தையும், தேவாலயத்திலும் சடங்காச்சார ஆராதனைகளிலும் அது உண்டாக்கிய தாக்கத்தையும் அவர் ஆழமாக அறிந்திருந்தது புரிகிறது.

அதாவது, யூதேயாவின் யூதர்கள் பலர் இன்னமும் தேவாலயத்தையும் பிற சடங்காச்சார முறைமைகளையும் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அப் 3:1; 15:1, 5; 21:17-24. அவற்றை அவர்களால் விடமுடியவில்லை. கலா 5:2-4; எபி 5:11-14. ஆனால், தேவாலய ஆராதனை முறைகளை இயேசுவின் மரணம் முற்றிலும் மாற்றிப்போட்டிருந்ததை ஸ்தேவானும் கிரேக்க யூதர்களும் புரிந்திருந்தார்கள்.

---

சில சடங்குகளுக்குப் பழக்கப்பட்டுவிட்டாலும், புதிய வெளிச்சம் கிடைக்கும்போது, அதை மறுதலிக்காமல் ஏற்றுக்கொள்வதற்கு நாம் என்ன செய்யவேண்டும்?

செவ்வாய், ஜூலை 24

## சனகெரிம் சங்கத்திற்கு முன்பாக

**குற்றஞ்சாட்டிற்கு ஸ்தேவானின் பதில் என்ன? அப் 7:1-53.**

ஸ்தேவான் கைதுசெய்யப்பட்டு, சனகெரிம் சங்கத்திற்குமுன் விசாரிக்கப்படுகிறார். நற்கிரியைகளும் பிரமாணமும் தேவாலய ஆராதனைமுறைகளும் தான் உலகத்தையே தாங்கிவருகிற மூன்று தூண்களென யூதர்கள் பாரம்பரியமாக நம்பிவந்தார்கள். மோசேயின் சடங்காச்சாரங்கள் இனித் தேவையில்லை என்று சொன்னதால், யூதமார்க்கத்தின் மிகவும் புனிதமான ஒன்றை அவமதித்ததாக நினைத்தார்கள்; அதனால்தான் ஸ்தேவானைக் குற்றஞ்சாட்டினார்கள். அப் 6:11.

ஸ்தேவான் சொன்ன பதிலானது, அப்போஸ்தலர் புத்தகத்தில் மிகநீண்ட பிரசங்கம். இஸ்ரவேலின் வரலாற்றை ஒப்புவிப்பதுபோலத் தெரியும்; ஆனால் பழைய ஏற்பாட்டு உடன்படிக்கையோடும், இஸ்ரவேல் வரலாற்றை தீர்க்கதரிசிகள் பயன்படுத்தினவிதத்தோடும் அந்தப் பிரசங்கத்தை ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்; இஸ்ரவேலருக்கு உடன்படிக்கையை நினைவூட்டி, சீர்திருத்தத்தைக் கொண்டுவர தீர்க்கதரிசிகள் இப்படிப் பேசுவதுண்டு. அதற்கு **ரீப்** என்கிற ஒரு எபிரெய சொல்லைப் பயன்படுத்தினார்கள். இதற்கு ‘உடன்படிக்கை வழக்கு’ என்று பெயர். உடன்படிக்கைப்படி இஸ்ரவேலர் நடக்காததால், தேவன் அவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுப்பதாக அந்த வார்த்தை காட்டுகிறது.

மீகா 6:1,2இல் **ரீப்** என்கிற வார்த்தை மூன்று முறை வருகிறது. சீனாயில் கொடுக்கப்பட்ட உடன்படிக்கையை நினைவூட்டும்படி (யாத் 20-23), தேவன் அவர்களுக்காகச் செய்த மகத்துவக் கிரியைகளைக் கூறுகிறார். மீகா 6:3-5. பிறகு உடன்படிக்கையின் நிபந்தனைகளை மீறியதாகச் சொல்கிறார். மீகா 6:6-12. பின்பு, மீறினதால் உண்டான சாபங்களைக் கூறுகிறார். மீகா 3:13-16.

இதே பாணியைத்தான் ஸ்தேவான் கடைப்பிடிக்கிறார். ஏன் இப்படிப் பேசினாய் என்று கேட்டவர்களிடம், குற்றச்சாட்டை மறுக்கவோ, தன் விசுவாசத்தை நிரூபிக்கவோ அவர் முயலவில்லை. அப் 7:51-53. மாறாக, இஸ்ரவேலருக்கு எதிராக தேவனுடைய வழக்கைக் கொண்டுவந்தபோது, தீர்க்கதரிசிகள் செய்ததை அவரும் செய்கிறார். தேவனுக்கும் யூதருக்கும் இருந்த உறவைச் சொல்லி, இப்போது நன்றியில்லாமல் இருப்பதைக் காட்டுகிறார்.

தேவனுடைய வழக்கறிஞராக, யூதத் தலைவர்களுக்கு எதிரான உடன்படிக்கை வழக்கைக் கூறுகிறார். அப் 7:51-53. அவர்களுடைய பிதாக்கள் தீர்க்கதரிசிகளைக் கொலைசெய்தார்கள். எனவே அதில் இவர்களுக்கும் பங்குண்டு. ‘நம் பிதாக்கள்’ (அப் 7:11,19,38,44,45) என்று சொல்லிவந்தவர் ‘உங்களுடைய பிதாக்கள்’ என்று மாறுகிறார். அப் 7:51. தான் தேவனுக்காக உறுதியாக நிற்பதைக் காட்டுகிறார். அதற்கு அதிக விலைகொடுக்க வேண்டியிருந்தது; ஆனாலும், பயம் இல்லாமல் பேசுகிறார்.

---

இயேசுவுக்காக எதையும் சமரசம் செய்யாமல், உறுதியாக நிற்கவேண்டிய அனுபவம் சமீபத்தில் எப்போது உண்டானது? உறுதியாக நின்றீர்களா, தடுமாறி விட்டீர்களா? தடுமாறிவிட்டீர்கள் என்றால், நீங்கள் செய்யவேண்டிய மாற்றம் என்ன?

## பரலோக மன்றத்தில் இயேசு

தீர்க்கதரிசி என்பதற்கான எபிரெய வார்த்தை நபி; தேவனுக்காகப் பேசுகிறவர் என்று அர்த்தம். இஸ்ரவேலருக்கு எதிராக தேவனுடைய வழக்கைக் கொண்டுவந்த அந்தக் கணமே ஸ்தேவானும் ஒரு தீர்க்கதரிசியாக மாறினார்; ஆனால், தீர்க்கதரிசியாக அவர் ஊழியம்செய்த காலக்கட்டம்தான் கொஞ்சம்.

**ஸ்தேவான் கண்ட தரிசனத்தின் பொருள் என்ன? அப் 7:55,56.**

“இவ்வளவு தூரம் ஸ்தேவான் பேசியதும் மக்கள் மத்தியில் கொந்தளிப்பு ஏற்பட்டது. தீர்க்கதரிசனங்களோடு கிறிஸ்துவைச் சம்பந்தப்படுத்திப் பேசி, தேவாலயம்பற்றி தன் கருத்தைக் கூறியதும், திகிலடைந்தவன்போல ஆசாரியன் தன் வஸ்திரத்தைக் கிழித்துக்கொண்டான். சீக்கிரமே தன் பேச்சு அடங்கப்போகிறதென அதிலிருந்து ஸ்தேவான் அறிந்துகொண்டார். தன் பேச்சால் உண்டான எதிர்ப்பிலிருந்து, இதுதான் தன் கடைசி சாட்சி என்பதைப் புரிந்துகொண்டார். பாதிப்பிரசங்கத்திலேயே திடுதிப்பென முடித்துவிட்டார்.” - *AA, p 100.*

யூதத்தலைவர்களுக்கு எதிராக நின்று, தேவனுடைய வழக்கிற்காக ஸ்தேவான் வாதாடியபோது, பரலோக மன்றத்தில் இயேசு நின்றுகொண்டிருந்தார். அதாவது, பரலோகப் பரிசுத்த ஸ்தலத்தில் பிதாவின் அருகில் நின்று கொண்டிருந்தார்; பரலோகத்தில் நடக்கவிருந்த மெய்யான விசாரணையின் ஒரு பிரதிபலிப்பாகத்தான் பூமியில் நடைபெற்ற அந்த விசாரணை இருந்தது. பொய்ப் போதகர்களையும் இஸ்ரவேலரின் தலைவர்களையும் தேவன் நியாயந்தீர்க்க இருந்தார்.

அதனால்தான் இங்கு மனந்திரும்பும்படி அழைப்பு கொடுக்கப்படவில்லை; ஆனால் அப்போஸ்தலர் புத்தகத்தின் இதற்கு முந்தைய பிரசங்கங்களில் மனந்திருந்துவதற்கான அழைப்பு கொடுக்கப்பட்டது. அப் 2:38; 3:19; 5:31. இஸ்ரவேலில் தேவனுடைய ஆட்சி முடிவுக்கு வரயிருந்தது; அதாவது, ஆபிரகாமுக்கு வாக்குரைக்கப்பட்டது போல, இஸ்ரவேல் தேசத்தின்மூலமாக இரட்சிப்பு அறிவிக்கிற வாய்ப்பு பறிபோனது. ஆதி 12:3; 18:17; 22:18. மாறாக, யூதர்-புறஜாதிகளில் இருந்து இயேசுவின் சீடரானவர்கள்மூலம் அந்தப் பணி நடைபெற இருந்தது; அவர்கள் இப்போது எருசலேமிலிருந்து புறப்பட்டுச் சென்று உலகத்திற்குச் சத்தியத்தை அறிவிக்க இருந்தார்கள். அப் 1:8.

**ஸ்தேவானின் மரணத்தை லூக்கா எவ்வாறு விவரிக்கிறார்? அப்7:57–8:1,2.**

தூஷிப்பவர்களுக்கான தண்டனை கல்லெறிந்து கொல்லுதல். லேவி 24:14. ஸ்தேவானுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டதா, அல்லது மதவெறியர்கள் சட்டவிரோதமாக அவரைக் கொன்றார்களா என்பது தெரியவில்லை. இயேசுவின் சாட்சிகளில் இரத்தச்சாட்சியாக மரித்த முதல் நபர் ஸ்தேவான்தான். சாட்சிகள் தங்கள் வஸ்திரங்களை சவுலின் பாதத்தண்டையில் வைத்துச் சென்றார்கள்; எனவே, ஸ்தேவானின் எதிரிகளுக்கு சவுல் தலைவராக இருந்திருக்கலாம். தன்னைக் கொன்றவர்களுக்காக ஸ்தேவான் ஜெபித்தபோது சவுலுக்காவும் அவர் ஜெபித்தார். மேலான குணமும், அசைக்கமுடியாத விசுவாசமும் உள்ள ஒருவர்தான் இப்படிச் செய்யமுடியும்; ஸ்தேவானின் விசுவாசத்திற்கும், அவர் வாழ்க்கையில் கிறிஸ்து இருந்ததற்கும் வல்லமையான எடுத்துக்காட்டு இது.

**வியாழன், ஜூலை 26**

# நற்செய்தி பரவுதல்

ஸ்தேவானைக் கொலைசெய்த அதே கும்பல் எருசலேமிலிருந்த விசுவாசிகளை பெரிய அளவில் உபத்திரவப்படுத்த ஆரம்பித்தார்கள். அந்தக் கும்பலின் தலைவரான சவுல், சபையைச் சின்னாபின்னாமாக்கிக் கொண்டிருந்தார். அப் 8:3; 26:10. ஆனால், அந்த உபத்திரவம் நன்மையானதாக அமைந்தது.

யூதேயா, சமாரியாமுழுவதிலும் சிதறிப்போன விசுவாசிகள் அங்கே நற்செய்தியைப் பிரசங்கித்தார்கள். யூதேயாவிலும் சமாரியாவிலும் சாட்சிகளாக இருங்கள் என்கிற கட்டளை அப்போது நிறைவேறியது. அப் 1:8.

**அப் 8:4–25இல் சொல்லப்படும் சம்பவத்திலுள்ள படிப்பினைகள் என்ன?**

சமாரியர்கள் பாதி இஸ்ரவேலர்கள்; மதநம்பிக்கையிலும் அப்படித்தான். ஒரே தேவன் உண்டென நம்பினார்கள்; மோசேயின் முதல் ஐந்து புத்தகங்களை ஏற்றுக்கொண்டார்கள்; விருத்தசேதனம் பண்ணிக்கொண்டார்கள்; மேசியாவின் வருகையை எதிர்பார்த்தார்கள். ஆனால், சமாரியரின் மத நம்பிக்கை சீர்கெட்டதென்றும், இஸ்ரவேலரின் உடன்படிக்கைகளில் சமாரியர்களுக்குப் பங்கில்லை என்றும் இஸ்ரவேலர்கள் நினைத்தார்கள்.

சமாரியர்கள் மனமாறியது எதிர்பாராத ஒன்று. சபையாரால் அதை நம்ப முடியவில்லை; எனவே, சூழ்நிலையை அறிந்துவர பேதுருவையும் யோவானையும் அப்போஸ்தலர்கள் அனுப்பிவைத்தார்கள். பேதுருவும் யோவானும் அங்குச் செல்லும்வரை ஆவியானவரை தேவன் அங்கிருந்தவர்களுக்கு அருளாமல் இருந்தார். அப் 8:14-17. விசுவாசக்குடும்பத்தின் அங்கத்தினர்களாக சமாரியர்களையும் முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதை அப்போஸ்தலர்கள் புரிந்துகொள்வது தேவநோக்கமாக இருந்திருக்கலாம். அப் 11:1-18.

அதோடு நிற்கவில்லை. எத்தியோப்பிய மந்திரி ஒருவருக்கு பிலிப்பு வேதாகமத்தை விளக்கிக்கூறி, அந்த மந்திரி ஞானஸ்நானம்பெற்றதாக அப் 8:26-39 கூறுகிறது. ‘அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானங்கொடுத்தான்.’ அப் 8:38.

முதலாவது சமாரியர்களுக்கு; இப்போது அந்திய தேசத்தானான எத்தியோப்பிய மந்திரிக்கு. தொழுதுகொள்ளும்படி எருசலேமுக்கு வந்தவர், தன் நாட்டிற்குத் திரும்பிக்கொண்டிருந்தார். எனவே சொல்லப்பட்டபடியே, இஸ்ரவேலின் எல்லைகளைத் தாண்டி சத்தியம் உலகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டது. இது வெறும் ஆரம்பம்தான். அந்த ஆதிகால யூதர்கள் சீக்கிரமே அப்போது அறியப்பட்டிருந்த உலகம் முழுவதிலும் சென்று, ‘இயேசு மரித்தார், தங்கள் பாவங்களுக்கான தண்டனையை ஏற்றுக்கொண்டார்’ என்று நற்செய்தி சொல்லி, எல்லாப் பகுதிகளிலும், எல்லாருக்கும் இரட்சிப்பின் நம்பிக்கையைக் கொடுக்கவிருந்தார்கள்.

சீமோனிடம் பேதுரு ‘நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன்’ என்று சொன்னார். அப் **8:23.** சீமோனாக இருந்தாலும், இதே போன்ற சூழ்நிலையில் இருக்கும் யாராக இருந்தாலும் இந்தப் பிரச்சனைக்கான தீர்வு என்ன?

## வெள்ளி, ஜூலை 27

## மேலும் படிக்க:

'எருசலேம் சபைக்கு நேரிட்ட உபத்திரவமானது, நற்செய்திப் பணிக்கு மிகப் பெரிய தூண்டுதலாக அமைந்தது. எருசலேமில் நற்செய்தியை வெற்றிகரமாக அறிவித்தார்கள்; உலகம்முழுவதிலும் செல்லும்படி இரட்சகர் கொடுத்திருந்த கட்டளையை மறந்து, எருசலேமிலேயே சீடர்கள் இருந்துவிடுகிற அபாயம் நிலவியது. முழுமூச்சுடன் ஊழியம் செய்யும்போதுதான் தீமையை எதிர்ப்பதற்கான பெலத்தைப் பெறமுடியும் என்பதை மறந்து, எதிரிகளின் தாக்குதல்களிலிருந்து எருசலேமின் சபையைப் பாதுகாப்பதைவிட மிகமுக்கியமான வேலை வேறு எதுவும் இல்லையென நினைக்க ஆரம்பித்தார்கள். இன்னும் சத்தியத்தைக் கேள்விப்படாதோரிடம் சத்தியத்தைப் பகிந்துகொள்ளும்படி புதிதாக மனமாறியவர்களுக்குப் பயிற்சியளிப்பதற்குப் பதிலாக, இதுவரையிலும் செய்த பணியே போதுமென திருப்தியடைகிற ஒரு போக்கைக் கடைபிடிக்கும் ஆபத்தில் இருந்தார்கள். தம் பிரதிநிதிகள் அயல்நாடுகளில் சிதறுண்டுபோகவும், பிறருக்காக ஊழியம்செய்யவும் அவர்களுக்கு உபத்திரவம் நேரிட தேவன் அனுமதித்தார். எருசலேமிலிருந்து துரத்தப்பட்ட விசுவாசிகள் 'எங்குந்திரிந்து, சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்.' – *EGW, AA, p 105.*

### கலந்துரையாடக் கேள்விகள்

1. *ஆதிகாலச் சபையினர் தங்கள்மூலம் நிறைவேறி வந்த பணிகளிலும், தங்களிலும் திருப்தியடையும் ஆபத்தில் இருந்ததாக எலன் ஒய்ட் மேலே சொல்லுகிறார். யூதர்களில் அநேகர் இயேசுவை மேசியாவென்று ஏற்றுக்கொண்டார்கள்; அதுவே போதுமென்று சபையார் நினைத்தார்கள். இதில் இன்று நமக்குள்ள எச்சரிப்பு என்ன? நாம் ஏற்கனவே பெற்றுக்கொண்டுள்ளவற்றைத் தக்கவைப்பதிலேயே கவனம் செலுத்துவதற்குப் பதிலாக, நாம் உண்மையில் செய்யவேண்டியதில், அதாவது, உலகத்தாருக்கு சத்தியத்தை அறிவிக்கச் செல்லவேண்டியதில் நோக்கமாக இருக்க, நாம் என்ன செய்யலாம்?*

2. *யூதர்களுக்கும் சமாரியர்களுக்குமிடையே பல நூற்றாண்டுகளாக கடும் பகை நிலவிவந்தது; அப்போஸ்தலர்களின் காலத்தில் அது எந்த அளவுக்கு இருந்திருக்க வேண்டுமென யோசியுங்கள். ஆனால் யூதனாகிய பிலிப்பு, சமாரியாவில் இயேசுவைப் பற்றிப் பகிர்ந்துகொண்டார். இதில் நமக்குள்ள பாடம் என்ன? செவந்த்-டே அட்வென்ட்டிஸ்ட் கிறிஸ்தவர்களும்கூட கலாச்சார, இன பேதங்களுக்கு விதிவிலக்கானவர்கள் அல்ல. தேவனுக்குமுன் நாம் அனைவரும் சமம் என்பதை சிலுவை எவ்வாறு நமக்கு உணர்த்தவேண்டும்? எல்லாருக்காகவும் கிறிஸ்து மரித்திருப்பதால், ஒவ்வொரு மனிதனும் விலைமதிக்க முடியாதவன் என்பதை எவ்வாறு நினைவில் நிறுத்தலாம்?*

3. *அந்த எத்தியோப்பியனை பிலிப்பு எவ்வாறு அணுகினார்? அப் 8:27-30. மற்றவர்களிடம் சத்தியத்தைப் பகிர கிடைக்கும் வாய்ப்புகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?*

4. *சபையின் ஊழியப்பணியை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு அப் 6-8இல் நாம் கற்றுக்கொண்ட பாடம் என்ன?*